# ஆளுமை- திருவள்ளுவரை சிறப்பாகக் கொண்ட நோக்கு

கே. கணேசராஜா
இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

இக்கட்டுரையானது உளமெய்யியல் தொடர்பான விடயத்தில் இந்திய சிந்தனை வரலாற்றில் திருவள்ளுவரின் திருக்குறளை தொடர்புபடுத்தி ஆய்வு செய்கின்றது. உலகில் உயிரினம் தோன்றியது முதல் உள்ளமும் அதனுடன் இணைந்த வகையில் பரிணாமவளர்ச்சி அடைந்தது. மனித இனம் விலங்கு இனத்தை விட மேம்பட்ட இனம் ஆகும். விஞ்ஞானமும் தொழிநுட்பமும் இவ்வாறு வளர்ந்துள்ளது என்றால் அதற்கு முக்கிய காரணம் மனிதன்தான். மனிதன் அவனது முயற்சியாலும் திறனாலும் பற்பல தொழிநுட்ப சாதனங்களை உருவாக்கி இருக்கிறான். இந்த செயற்பாடுகள் அனைத்துக்கும் காரணம் தனிமனித ஆளுமைப் பண்பேயாகும். ஆளுமைப் பண்பு ஒரு மனிதனை பிறரிடமிருந்து பிரித்துக்காட்டும் தனித்துவமானதாகும். நமது எண்ணம், உணர்ச்சிகள், பேச்சு, செயல்கள் மூலம்தான் ஆளுமைப் பண்பு வெளிப்படுகின்றது. தமது சுற்றுச் சூழலுக்கு ஏற்றபடி இணக்கமாக நடந்து கொள்வதையும், நாம் சமூகத்தில் இணக்கமாக நடந்து கொள்வதையும், சமுதாயத்தில் தமக்குரிய மதிப்பினையும் தமது நல்வாழ்வினையும் தமது ஆளுமைப் பண்பு நிர்ணயிக்கிறது. தமது மதிப்புக்கள் நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புக்களை நமது ஆளுமைப்பண்பு நிர்ணயிக்கின்றது. ஒருவரது ஆளுமைப் பண்பை நிர்ணயிக்கும் காரணிகளில் பாரம்பரியம், சூழல், சமூகவியல், ஆத்மீகம், உளவியல் போன்ற பல காரணிகள் செல்வாக்கு செலுத்துவதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். இந்த நோக்கில்திருக்குறளில் திருவள்ளுவா் ஆளுமை என்பதை எவ்வாறான முறையில் விளக்குகிறாா் என்பதை ஆராய்வது அவசியமானது. இதற்காக என்னால் பல்வேறு ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக பகுப்பாய்வு, ஒப்பீட்டு, விவரணமுறையியல் என்பவற்றோடு பல நூல்களும், சஞ்சிகைகளும், இணையத்தளத் தரவுகளும் என்னால் பயன்படுத்தப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**பிரதான சொற்கள்:** அன்பு, உணா்வுகள், வாய்மை, நோ்மை, நேரியசிந்தனை

**அறிமுகம்**

ஆளுமை பற்றி வரையறை செய்வது உளவியல் ஆராய்ச்சியாளா்க்கே ஒரு கடினமான செயல். ஒரு தனிமனிதன் தனது சுற்றுச் சூழலோடு உறவு கொள்ளும் சிறப்பான முறையை உருவாக்கும். அவரது சிந்தனை, உணா்வுகள், நடத்தை ஆகியவற்றின் ஒட்டுமொத்தமே ஆளுமைப் பண்பு என உளவியலாளா்கள் பொதுவாக குறிப்பிடுகின்றனா். ஆளுமைப் பண்பு ஒவ்வொருவருக்கும் தனி! அதேநேரம் வேறுபட்டது! அது அவரது சிந்தனை, உணா்வுகள், நடத்தை அனைத்தையும் உள்ளடக்கியது. இப்பண்பு உடனுக்குடன் மாறுபடுவதல்ல. நெடுங்காலமாக ஒருவரிடம் இடம்பெறுவது ஆகும்..

The terms *'personality'* in English, *'personnalite'* in French, and *'Personlichkeit'* in German closely resemble the personalities of Medieval Latin. Most agree that the *'Personality'* originated from the Latin ***Persona***, which referred to a theatrical "***Mask***" worn by Roman actors in Greek dramas. These ancient Roman actors wore (*persona*) to project a role or false

appearance,(Jess Feist and Gergory J ,1987:3) but its meanings are in so many respects equivalent to those of the modern terms that our historical sketch must commence with persona itself. "***Persona***" Several authorities regard the Latin term as a direct derivation from the Greek. The antecedent of person favored by most authorities, however, is the Latin phrase ***per sonar***. According to this theory the term had reference to the large mouth of the mask or perhaps to a reed device inserted into it for projecting the voice of the actor. Those who hold this view concede that from the very beginning persona, by a metonymic change, referred not so much to the vocal aspects of the mask as to its visual properties (H.Rheinfelder, 1996: 22).

ஒருவரது ஆளுமைப் பண்பு ஒருவரை மற்றவரிடமிருந்து தனியே பிரித்துக் காட்டும். ஒரே இனம், பண்பாடு கொண்டோரிடம் சில பண்புகள் பொதுவாக இருந்தாலும் தனி மனிதர்களையொட்டிப் பல பண்புகள் வேறுபடும்.

பிற மனிதர்களுடன் உறவு கொள்வதை யொட்டி ஒரு மனிதனின் தனித்துவப் பண்புகள் வெளிப்படும். அவ்வாறு வெளிப்படும் பண்புகள் நேரியலாகவோ, எதிர் மறையாகவோ பிரித்துரைக்கப்படுகின்றன. பிறருடன் நட்போடு உறவாடுவது ஆக்கபூர்வமான செயலாகப் பாராட்டப்படுகின்றது. சமூக உறவுகளைக் கண்டு விலகிச் செல்வது அச்சம், கவலை, தோல்வி மனப்பான்மை ஆகியவற்றின் விளைவுகளாகக் கருதப்படுகின்றது.

பல்வேறு ஆளுமைப் பண்புகளின் கூறுகளில் நம்மிடம் சில இருக்கலாம். சில இல்லாதிருக்கலாம். நம்மிடம் உள்ள பல்வேறு பண்புநலன்களின் மொத்த அமைப்பே நமது ஆளுமைப் பண்பாக குறிப்பிடப்படும். அந்த பண்பு நலன்கள் வெவ்வேறு நிலைகளில் நம்மிடம் இருக்கலாம். வலுவான நிலையிலோ, நடுநிலையிலோ, வலுவற்ற நிலையிலோ அமைந்திருக்கலாம் (எஸ்.சுந்தரசீனிவாசன்,2010 : 2).

ஆளுமைப் பண்பு நலன்களில் முப்பத்தைந்து கூறுகளை தங்களது ஆய்வுகளில் உளவியல் அறிஞர்கள் கண்டுள்ளனர். குறிப்பாக மேலைத்தேய சிந்தனைமரபில் ஆளுமைசார்ந்த விடயத்தை கோட்பாட்டு வடிவில் பல சிந்தனையாளர்கள் விளக்கியுள்ளார்கள் குறிப்பாக Hippocrates, Kretschmer, Sheldon,C.G.Jung, A.Adler, W.Allport, Sigmund Freud, A.Maslow, R.B.Cattellபோன்றோரைக் குறிப்பிடலாம். (Group of Editors, 1987:154) இந்த உளவியல் நிபுணர்களில் அமெரிக்க உளவியலாளரான "ஆர்.பி.காட்டல்" என்பார். ஆளுமை தொடர்பாக பன்னிரெண்டு கூறுகளை பரிந்துரை செய்துள்ளார்.அந்தக் கூறுகளை தற்போது ஒவ்வொன்றாகக் காண்போம்.

1. அ. **வெளிப்படையானவர்**: உணர்வுகளை வெளிப்படுத்துபவர் தெளிவாகவும், நேரடியாகவும் பேசக்கூடியவர். ஆ. **உள்ளடங்கியவர்:** கவலைப்படுபவர், வாய்திறவாதவர், அமைதியானவர்.

2. அ. **மனத்திறனுடையவர்:** நுண்ணறிவு உள்ளவர், கூர்மையானவர், வேண்டியதைச் சாதிப்பவர். ஆ. **மனத்திறன் குறைபாடுள்ளவர்:** நுண்ணறிவற்றவர், மந்தமானவர், பணிந்து செல்பவர்.

3. அ. **உறுதியான உணர்வாற்றல்:** பதற்றமற்றவர், வாழ்க்கை பற்றி சரியான அறிவுள்ளவர்.ஆ. **உறுதியற்ற உணர்வு:** பதற்றம், நரம்புத் தளர்ச்சி, நழுவல், முதிர்ச்சியின்மை.

4. அ. **அதிகாரம்:** தன்னிலையில் உறுதியானவர், நம்பிக்கையானவர், போராடக்கூடியவர். ஆ. **அடங்கிப் போதல்:** அடங்கிச் செல்பவர், உறுதியற்றவர், சொன்னதைச் செய்பவர்.

5. அ. **மகிழ்ச்சி:** வேடிக்கை, விளையாட்டு, மகிழ்ச்சியுடன் காணப்படுவர்.ஆ. **வருத்தம்:** மனச்சோர்வு, எதிர்மறை எண்ணம், மந்தம் கொண்டவர்.

6. அ. **நேரியல் பண்பு:** பிறரை நன்கு கவனிப்பவர், பொறுமையுடன் தொடர்ந்து செயலாற்றுபவர். ஆ. **எதிர்மறைப் பண்பு:** சமுதாயக் கடமைகளில் அக்கறை இல்லாதவர், தொடங்கியதைத் தொடராதவர்.

7. அ. **துணிவானவர்:** அந்நியர் ஆனாலும் துணிந்து பழகுவார், மறுபாலாரிடமும் நாணமின்றி பேசுவார். ஆ. **துணிவற்றவர்:** தெரிந்தவர்களிடமும் பழகத் தயங்குவார், மறுபாலாரிடம் நாணி ஒதுங்குவார்.

8. அ. **மனமுதிர்ச்சியாளர்:** சுதந்திரப் பறவை, தனக்குத் தானே கவனித்துக் கொள்ளக் கூடியவர் (T.F. Pettijon,1992:263). ஆ. **சிறு பிள்ளைத் தனமுடையோர்:** பிறரைச் சார்ந்து வாழ்பவர், மன முதிர்ச்சியற்றவர், பிறர் கவனத்தை நாடுபவர்.

9. அ. **பண்பட்ட மனம்**: சமூக உணர்வு: பண்பாளர், நிதான அறிவுடையவர், தன்னை உணரக் கூடியவர், உணர்வுடையவர். ஆ. **பண்படாமை**: சமூக நெறியறியாதவன், பண்பற்று நடந்து கொள்பவர்,

10. அ. **நம்பகத் தன்மை**: நம்பத்தக்கவர், நன்கு புரிந்து கொள்பவர், ஆ. **நம்பிக்கை இன்மை**: பொறாமையும் ஐயப்பாடும் உள்ளவர்.

11. அ. **வழக்கமான செயல்பாடு:** உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காது

வழக்கமான நெறி முறைகளைக் கடைப்பிடிப்பவர். ஆ.**எதிர்பார்க்காத செயல்பாடு**: எதிர்பார்க்காத வகையில் முரண்பட்டுச் செயற்படுபவர்.

12. அ. **மேம்பட்டவர்**: தர்க்கரீதியான மனம், அமைதியான நடத்தை, அலட்டலின்மை. ஆ. **தாழ்ந்தவர்**: உணர்ச்சிகளைக் காட்டுபவர், பிறரைக் கண்காணிப்பவர் (Ibid,1992:263).

**திருக்குறளில் ஆளுமை**

திருவள்ளுவர் பழந்தமிழ் இலக்கியமான திருக்குறளை இயற்றிய புலவர் எனக் கருதப்படுகின்றார். கி.மு. முதல் நூற்றாண்டில் தற்பொழுதைய சென்னை நகரில் மயிலாப்பூரில் வாழ்ந்தார் இவரது சிந்தனைகள் தமிழியல் சிந்தனை வரலாற்றில் முக்கியமானதாகும். சீரிய ஆளுமைப் பண்புள்ளவர்கள் வேந்தர்களுக்கொப்ப தலைவர்களாகத் திகழ்வார்கள் எனக் கூறும் வள்ளுவர் மேலும் மனிதனது ஆளுமைப்பன்பு பற்றி கூறுவதை நோக்குவோம்.

**“அஞ்சாமை,ஈகை, அறிவு, ஊக்கம்**
**இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க்கி யல்பு”**
**(குறள்:382)**

தான் எதிர்கொள்ளும் எந்த ஒரு பிரச்சினையையும் கண்டு மலைத்துப் போய் அஞ்சி ஒளிந்துவிடாது துணிவோடு சமாளிப்பது சிறந்த பண்பு. இதையே திருவள்ளுவர் இக்குறளில் முதலாவதாக எடுத்துரைக்கிறார். ஈகை எனும் உயர் பண்பு பற்றி முன்னரே ஆசாரக்கோவை, நாலடியார் ஆகிய நூல்களிலும் உள்ளது. ஈகை ஒரு மனிதனுக்கு சமூகத்தில் மதிப்பினையும் மனதுக்கு நிறைவையும் மகிழ்ச்சியையும் அளிக்கும் பண்பு. அடுத்து அறிவு, எந்தத் துறையிலே ஒருவன் ஈடுபடுகிறானோ அது பற்றிய முழுமையான அறிவு ஒருவர்க்கு வேண்டும். அப்போதுதான் அதில் எதிர்வரும் பிரச்சினைகளை அவர் எளிதில் சமாளித்து வெற்றி காணமுடியும். மற்றுமொரு சீரிய பண்பான ஊக்கம் ஆளுமை மேம்பாட்டில் முக்கிய இடம் வகிக்கிறது. ஊக்கம் இன்றி எந்த ஒரு செயலையும் திறம்படச் செய்யவோ குறிப்பிட்ட காலத்தில் முடிக்கவோ இயலாது. எனவே, இலக்கினை அடைய ஊக்கம் ஒரு கட்டாயத் தேவை.

**“எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை**
**அதிரவருவதோர் நோய்”**
**(குறள்:382)**

பின்னர் நேரிடப்போவதை முன் கூட்டியே அறிந்து கொள்ளுதல் மிகவும் போற்றக் கூடியதொரு திறனாகும். அத்தகைய திறன் படைத்தவர்கள் பின்னர் நேரிடக் கூடிய பிரச்சினைகளைத் தவிர்க்கத் தேவையான முயற்சி கொள்வர். நேரிட்டால் அவற்றை எதிர்கொள்ளத் தேவையான யுக்திகளையும் தயாராக வைத்திருப்பார்கள். எனவே, எந்தப் பிரச்சினையும் அவர்கள் அதிரும் வகையில் தாக்காது. அவர்களால் எதனையும் எளிதில் எதிர்கொள்ளும் ஆளுமை அவர்களிடம் உள்ளது. தற்போது ஆளுமை மேம்படத் தேவையான மேலும் முக்கியமான ஐந்து பண்புகளை திருக்குறள் கூறுகிறது.

**“அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையென ஐந்து சால்பு ஊண்றிய தூண்” (குறள்:382)**

மனிதத் தன்மையின் முதல் அங்கம் அன்பு. ஒருவர் காட்டுகின்ற அன்பு பன்மடங்கில் பல்வேறு இடங்களில் அவருக்குத் திரும்பக் கிடைக்கும். நாண் என்பது தவறான செயல்களைச் செய்வதற்கு ஒருவர் நாணி அவற்றை ஒதுக்கவேண்டும் என்பதையே முகத்தை மறைத்துக்கொண்டு செல்வதை நாம் காண்கிறோம். அத்தகைய குற்றம் செய்வதற்கு முன்னரே தெரிந்திருந்தால் குற்றத்தையே தவிர்த்துவிடலாம்.

ஒப்புரவு என்பது நாம் பெரியோர்களிடம் காட்டும் மதிப்பினைக் குறிக்கிறது. அது சமூகத்தில் நமது மதிப்பினையும் உயர்த்தும். அடுத்து கண்ணோட்டம் என்பது நாம் பிறர்பால் காட்டும் பிரிவினைக் காட்டுகிறது. பரிவோடு அணுகினால் விளைவு பிறர்க்கு நன்மையும் மகிழ்ச்சியோடு அளிப்பதோடு நமக்கும் மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். சொல்வண்மை ஒருவர் ஆளுமைக்கு அழகூட்டுகிறது என்று கூறுகிறார். தற்போது அதனை வள்ளுவர் மேலும் விளக்கும் போது.

**“விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப்பெறின்” (குறள்:382)**

ஒருவர் தான் சொல்ல வேண்டியதை முறைப்படுத்தி சரியான வரிசையில்

சொல்லக்கூடுமானால் அவர் சொன்னபடி உலகத்திலுள்ளோர் விரைந்து செயல்படுவார்கள். அதுதானே பெரும்பாலான மனிதர்களின் நோக்கம்.

**"ஆக்கமும் கேடும் அதனால் வருதலால் காத்து ஓம்பல் சொல்லின் கண் சோர்வு"**
**(குறள்:382)**

நாம் சொல்லுகின்ற சொற்களையொட்டியே நல்ல விளைவுகளும் தீய விளைவுகளும் தோன்றுகின்றன. எனவே தவறான சொற்களைத் தவிர்ப்பதில் கவனம் செலுத்தித் திறமான சொற்களையே நாம் பயன்படுத்த வேண்டும். இக்கருத்துக்களையே மீண்டும் வற்புறுத்துகிறார்.

**"திறன் அறிந்து சொல்லுக சொல்லை அறனும் பொருளும் அதனின் ஊங்கு இல்"**

**(குறள்:382)**

திறமையான சொல்லே அறத்தையும் பொருளையும் எஞ்சி நிற்பது. எனவே சொல்லின் திறனை அறிந்து சொல்ல வேண்டும்.

**சொல்லாட்சியில் ஆளுமை கொண்டவன் சிறப்பு யாது?**

**"சொல்ல வல்லவன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது" (குறள்:382)**

சோர்வு இல்லாது, அஞ்சாது சொல்வதற்கு வல்லவனாக, சொல்லின் செல்வனாக ஒருவன் திகழ்வானேயானால் அவனை யாராலும் வெல்ல இயலாது என்று அறுதியிட்டுக் கூறுகிறது இக்குறள். எனவே பேச்சுத்திறனை வளர்த்தல் ஆளுமைப் பண்பிற்கு அணி சேர்க்கிறது.

மனித உறவுகளை மேம்படுத்தல் இன்றைய சமூகவாழ்வில் அனைவர்க்கும் மிக இன்றியமையாத தேவையாகும். நமது பண்பு நலன்களைப் பொதுவாக வெளிக்காட்டுவது நமது பேச்சுக்களேயாகும்.

**"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" (குறள்:382)**

பிறருடன் நல்ல உறவுகளைப் பேண விரும்புவர் எதைக்காக்காவிட்டாலும் தனது பேச்சினைக் கட்டுப்படுத்த வேண்டும். நாவடக்கம் தவறான சொற்கள் உறவினை முறிக்கும்.

**"அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின்"**

**(குறள்:382)**

உள்ளம் மலர்ந்து பிறர்க்குக் கொடுத்தல் உயரிய அறம் என்று உலகத்தாரால் போற்றப்படுகிறது. அதைவிடப்பெரிய அறம் முகம் மலர்ந்து இனிய சொற்களைப் பேசுதல் என்று வலியுறுத்திக் கூறுகிறார் வள்ளுவர். கொடையை விட மனித உறவுகளை மேம்படுத்தக்கூடிய ஆற்றல் புன்னகையோடு இனிய சொற்களைப் பேசுவதிலே உள்ளது. அதற்குப் பொன்னோ பொருளோ தேவையில்லையே. பயன்படுத்திப் பலன் பெறலாமே. இன்சொல்லோடு மற்றொரு நற்பண்பையும் இணைத்துப் பரிந்துறைக்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

**"பணிஉடையன் இன்சொலன் ஆதல் ஒருவர்க்கு அணிஅல்ல மற்றுப்பிற"**
**(குறள்:382)**

ஒருவன், கல்வி கேள்விகளிலோ, செல்வத்திலோ, பதவியிலோ எத்துணை பெரியவனாக இருப்பினும் அவனுக்கு பணி உடைமையும் இன்சொல்லுமே ஒருவனுக்கு முக்கிய அணிகலன்கள். பொன்னோ, ரத்தினமோ அவற்றிற்கு ஈடாகாது. பணிவும் இன்சொல்லுமே உறவுகளை வளர்த்து ஒருவனை உயர்த்தும்.

**"சினம் எனும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் எனும் ஏமப் புணையைச் சுடும்"**
**(குறள்:382)**

மனித உறவுகளை மேம்படுத்த வேண்டிய ஒருவர் சினம் எனும் தீய பண்பை அறவே ஒழிக்க வேண்டும். ஏனெனில் சினம் எனும் தீய குணம் யாரிடத்தில் சேர்ந்து குடிகொண்டுள்ளதோ அவரை அழித்தொழித்துவிடும். அதுமட்டும் அல்ல நெடுநாட்களாக அவரிடம் பாசம்பூண்டு ஒழுகும்

உற்றார், நண்பர் ஆகியோரையும் அவரிடமிருந்து பிரித்துவிடும்.

**"தீயவை தீயபயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும்" (குறள்:382)**

தீய செயல்கள் பிறர்க்கு மட்டுமன்றி நமக்கும் தீய விளைவுகளையே ஏற்படுத்தும். எனவே தீயனவற்றை தீயைக் காட்டிலும் அஞ்சி ஒதுக்கி விட வேண்டும்.

**"திறன் அல்ல பிறர் செய்யினும் நோநொந்து அறன் அல்ல செய்யாமை நன்று"**

**(குறள்:382)**

முந்தைய குறளில் நாமாக பிறர்க்கு தீயனவற்றைச் செய்யலாகாது என்று கூறிய வள்ளுவர் இங்கு மேலும் ஒரு கட்டம் கடந்து போய்ப் பிறர் நமக்குத் தவற்றை இழைத்தாலும் மனம் நொந்துபோய் நாம் அவர்களுக்குத் திரும்ப தீயசெயல்களைச் செய்யாமலிருப்பதே நன்று என்று கூறுகிறார். நல்லுறவிற்கு இதை விட வேறு என்ன வேண்டும்.

**"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று" (குறள்:382)**

பிறர் நமக்குச் செய்யும் உதவியை, நன்மையை நாம் ஒருபோதும் மறக்காது அவரிடம் நன்றி பாராட்ட வேண்டும். அதே நேரத்தில் பிறர் நமக்கு ஏதும் தீங்கு செய்தால் அதை நினைத்துக் கொண்டே இருந்து அவர்பால் தொடர்ந்து பகைமை பாராட்டாது அவர் செய்த தீமையை அப்போதே மறந்துவிட வேண்டும். நமது மனம் அழுத்தம், இறுக்கம் இன்றி செவ்வனே செயல்பட என்ன அருமையான அறிவுரை. மனித உறவுகள் மேம்பட்டு ஒருவரது ஆளுமை சிறந்து விளங்க வாய்மை, பொய்மை பற்றி ஒருவர் தெளிவாக தெரிந்து கொள்ளுதல் நலம்.

**"வாய்மை எனப்படுவது யாதெனின் யாது ஒன்றும் தீமை இலாத சொலல்"**

**(குறள்:382)**

உண்மை பேசுவதாக எண்ணிக்கொண்டு சிலர் தெரிந்தோ தெரியாமலோ பிறர் மனம் புண்படும்படியோ பிறருக்கு தீங்கு நேரும்படியோ பேசுவர். அவர் பேசுவது உள்ள படியே அமைந்திருந்தாலும் அது பிறர்க்குத் தீங்கு விளைவிக்குமானால் அது உண்மையாகாது என்பதே வள்ளுவர் வாக்கு.

**"பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்"**

**(குறள்:382)**

வேறு யாருக்கும் தீமை விளைவிக்காது பிறர்க்கு நன்மை பயக்குமானால் அச்சொல் உண்மைக்குப் புறம்பாக இருந்தாலும் வாண்மையே ஆகும் என்று விளக்குகிறது இக்குறள். இங்கு தத்துவஞானி சாக்ரடீசின் கூற்று ஒப்பு நோக்கத்தக்கது. ஒரு செய்தியை பிறரிடம் கூறுமுன்னர் மூன்று சல்லடைகளால் சலித்துப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள். நீங்கள் சொல்வது சரிதானா? அது யாருக்கும் நன்மை செய்யுமா? அது யாருக்கும் தீமை விளைவிக்காதா? என்று கூறுகிறார் சாக்ரடீஸ். நமது வள்ளுவர் இன்னும் ஒரு படி மேலேபோய் குற்றமற்ற நன்மை பயக்குமானால் பொய்மையும் வாய்மைக்கு நிகராகும் என்கிறார்.

**"அன்பு ஈனும் ஆர்வம் உடைமை ஆகஈனும் நண்பு எனும் நாடாச்சிறப்பு"**

**(குறள்:382)**

பிறர்பால் நாம் காட்டுகின்ற அன்பு நம்மால் பிறர்க்கும் ஏனைய தொடர்புடையோர்க்கும் ஆர்வத்தை ஊட்டி இறுதியில் கிடைத்தற்கரிய நட்பு எனும் அரிய உறவைத் தேடித்தரும். ஆளுமைப் பண்பு மேம்பட தேவையான பலவற்றை முன்னர் கண்டோம். தவிர்க்க வேண்டியவற்றையும் வள்ளுவர் வாய்மொழியில் கேட்போம்.

**"அழுக்காறு, அவா, வெகுளி, இன்னார்ச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்"**

**(குறள்:382)**

அழுக்காறு எனும் பொறாமைப் பண்பு ஒருவர் தான் முன்னேறும் வழிகளைக் காணாது பிறர்க்குத் தீங்கு செய்யும் வழிகளையே நாடச்செய்கிறது. ஆசைதான் ஒருவரது இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் மூலகாரணம் எனப் புத்தர் தெளிவுறக் கூறியுள்ளார். வெகுளி எனும் சினம் யாரிடம் உள்ளதோ அவரையே கொல்லக் கூடியது என வள்ளுவரே முன்னொரு குறளில் தெளிவுறக் கூறியுள்ளார். இன்னாச்சொல் கூறுபவர் எவ்வாறு தன் சொல்லால் தானே கெட்டு வருந்த நேரிடும் என்பதையும்

முந்தைய குறட்பாக்கள் விளக்கியுள்ளன. எனவே உயரிய பண்புகளை ஒருவா் நிலைநிறுத்திக் கொள்ள முதல் கட்டமாகப் பொறாமை , பேராசை, சினம், இன்னாச்சொல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஒருவா் ஆளுமைப்பண்பில் சிறந்து விளங்கினால் சமூகம் அவரைப் பாராட்டும். சமூகத்திற்கேற்ற முறையில் பண்புகள் சிறந்திருத்தல் நலம்.

**"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லாா் அறிவிலா தாா்"**

**(குறள்:382)**

என்னதான் பல துறைகளில் தோ்ச்சி பெற்று கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினாலும் உலகத்தோடு ஒத்து வாழக் கற்றிருத்தல் முக்கியம், தேவை என இக்குறள் உணா்த்துகிறது. இக்கருத்தையே மற்றுமொரு குறளில் வேறு சொற்களில் வலியுறுத்திக் கூறுகிறாா்.

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியாா் திண்ணியா் ஆகப் பெறின்"**

**(குறள்:382)**

திண்ணியா் என்ற சொல் ஒருவரின் மன உறுதியைக் குறிக்கிறது. மன உறுதி எனும் சீாிய ஆளுமைப் பண்பு கொண்டவா் தாம் எண்ணிய எல்லா இலக்குகளையும் திட்டமிட்டபடி தவறாது செய்து முடிப்பாா்கள் என்று கூறுகிறாா். அதுதானே மனிதா்களின் நோக்கம் (பரிமேலழகா் உரை, திருக்குறள்: 2010).

**முடிவுரை**

ஆளுமையும் ஆளுமை சாா்ந்த பிரச்சினைகளும் உளவியலிலும் மற்றும் முகாமைத்துவவியலிலும் முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. ஆளுமை பற்றி பல்வேறு கருத்துக்களும் கோட்பாடுகளும் கூறப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு தனி மனிதனது உடல், உளப்பண்புகளின் ஒட்டுமொத்தமான செயற்பாடாக ஆளுமையை பொதுவாக அடையாளப்படுத்தலாம். இந்தப்பின்னணியில் R.B.Cattell உம் திருவள்ளுவரும் பல்வேறு வகையான கருத்துக்களை கூறியிருப்பதை இதன் மூலம் அவதானிக்க முடிகின்றது. தற்கால உலகில் ஆளுமை என்ற அம்சம் பல்வேறு பரிமாணங்களை அல்லது முகமூடிகளை வலியுறுத்துவதாக அமைகின்றது. R.B.Cattell என்பவர் 12 வகையான பண்புகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஆளுமையை விபரிக்கின்றார். அதே போல் திருக்குறளில் திருவள்ளுவர் தனது இரண்டு வரிப்பாடல்கள் மூலம் ஆளுமை பற்றிய விடயத்தை ஆங்காங்கே (Virtue) விளக்குகின்றார். வள்ளுவரின் கருத்துக்களில் நற்பண்பு என்ற விடயம் ஆளுமைக்கு முக்கியப் படுத்தப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


Cattel, Raymond B. - Personality. USA: McGraw-Hill Book Company, 1950.

Corsini, Raymond J., and Auerbach, Aland J., - Concise Encyclopedia of Psychology. USA: John Wiley & Sons, 1996.

Group of Editors - Education Psychology, Open University of SriLanka, 1997.

Macropedia, - The New Encyclopedia Britannica. vol. 25. USA: Chicago, 1997.

Paul Edwarded., - An Encyclopedia of Philosophy. London: Macmillan Philosophy, 1960.

Pettijon, Terry F., - Psychology: A Concise Introduction. USA: The Dushkin Publishing Company Pvt. Ltd., 1992.

Ramalingam, Panch., - Dictionary of Psychology. New Delhi: Academic Publishers, 1995.

கந்தசாமி, சொ.ந., - தத்துவ நோக்கில் தமிழிலக்கியம்.்.சென்னை: மணிவாசகா் ஆப்டிசட்.். 2005.

சிவானந்தமூர்த்தி க . மற்றும் அன்ரனிடயஸ் - மெய்யியல் ஓர் அறிமுகம்-1. யார்ப்பாணம்: அம்பாள் வெளியீட்டகம், 1998.

சீனிவாசன், ச., - திருக்குறள்.பரிமேலர்கர் உரை.:. சென்னை: சென்னை ஆப்டிசட்.:. 1997.

**WEB ADDRESSES**

http://www.personalitypage.com/high-level.html

Dictionaries

Arun Kumar, - Encyclopedia of Philosophy. vol. 1 New Delhi: Anmol Publication, 2000.

Audi, Robert, - The Cambridge Dictionary of Philosopy. United Kingdom: Cambridge University Press, 2001.